Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 24 இதழ் - 12 டிசம்பர் 2011

தனிப் பிரதி ரூ. 8/-



## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

- வரும் 2012–ம் ஆண்டிலும் திருமறை ஆசான் இதழை பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து பத்திரிக்கை நிறுத்தப்படும்.
- இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.
- திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ........................................ 1
2. ஏன் நாங்கள் ஜெபத்தில் நம்பிக்கை வைக்கிறோம் ? ........................................ 9
3. நிழலும், நிஜமும் ........................................ 15
4. வாலிபர் பகுதி ........................................ 19
5. சிறுவர் பகுதி ........................................ 23
6. துருவின் சாட்சி ........................................ 25
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........................................ 28


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 NOVEMBER - 2011 Issue - 11


ஆசிரியர் உரை

## அது தேவ பெலனாயிருக்கிறது

"அது" என்று நாம் ஒன்றைக் குறிப்பிட்டு ஒருவரிடம் சொல்லும் போது, எதிரிலிருப்பவரிடமிருந்து உடனடியாகக் கேட்கப்படும் கேள்வி அது "எது" என்பது தான். இப்பொழுது, அந்த அது, "எது" என்றும், அந்த அது அப்படி "ஏன்" என்றும் தெரிந்து கொள்வதற்கு முன்பாக, தலைப்பில் இடம் பெற்றிருக்கும் "பெலன்" என்பது என்ன என்று கொஞ்சம் கவனித்து விடுவோம். நம்முடைய தமிழ் வேதாகமத்தில் "பெலன்" என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தைக்கு, ஆங்கில வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைக்கான இன்னொரு பொருள் "வல்லமை" என்பது. இந்த இரண்டு தமிழ் வார்த்தைகளும் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் கொடுப்பதால், "அது" "தேவபெலனாக" இருக்கிறது என்று சொல்வதும், "தேவ வல்லமையாக" இருக்கிறது என்று சொல்வதும் ஒன்று தான்.

பொதுவாக, உலகிலுள்ள எல்லா மனிதர்களுக்குமே பெலன், சக்தி, திராணி போன்றவைகள் உண்டு. ஆனால், அவை எல்லாருக்கும் ஒரே மாதிரியாகவோ, அல்லது சம அளவிலோ இருப்பதில்லை. அது ஒருவருக்கொருவர் வேறுபடுகிறதாகவும், மாறுபடுகிறதாகவுமே உள்ளது. ஆம், ஒருவருக்கு இருக்க வேண்டிய அளவில் கூட இருக்காது. இன்னொருவருக்கோ எதிர் பார்ப்பதை விட அதிகமாக இருக்கும். ஆனால், என்னதான் மனிதன் மீறின பெலத்தையும், கூடுதல் சக்தியையும், மிஞ்சின

திராணியையும் உடையவனாக இருந்தாலும், அதை தேவ பெலத்தோடும், தேவ வல்லமையோடும் ஒருபோதும் ஒப்பிட முடியாது. ஏனெனில், மனித பெலத்தினாலே செய்யக் கூடியவைகள் அநித்தியமுள்ளவைகளாக இருந்து, காலத்தால் கரைந்து அழிந்து போகிறது அல்லது கண்ணெதிரிலேயே காணாமல் போய் விடுகிறது. இக்கூற்று உண்மைதான் என்பதற்கு உலக சரித்திரமும், வேதாகம சரித்திரமும் சான்று பல பகர்கிறது.

ஆனால், தேவ பெலன் மற்றும் தேவ வல்லமை இதற்கு நேர் மாறானது. தேவ ஞானத்தையும், பெலத்தையும் குறித்து மனிதர்களாகிய நாம் நம்முடைய குறைந்த அறிவை வைத்து அளவிட்டுவிட முடியாது. ஆயினும், ஆவியானவர் பழைய ஏற்பாட்டு பக்தன் யோபுவைக் கொண்டு கூறுவதைக் கவனித்தால் சிறிதாகிலும் கிரகித்துக் கொள்ள முடியும். " ...*அவரிடத்தில் ஞானமும் வல்லமையும் எத்தனை அதிகமாய் இருக்கும்? அவருக்குத் தான் ஆலோசனையும் புத்தியும் உண்டு* " என்று (யோபு. 12:13). ஆவியானவரே, தேவனுடைய ஞானம் மற்றும் பெலன் பற்றிப் பேசும்போது, இவ்வளவு என்று சொல்லாமல் கேள்விக் குறியோடு முடித்துக் கொள்ளுகிறார். இதே அதிகாரத்தில், இன்னும் ஒரு நான்கு வசனங்கள் கீழே, "அவரிடத்தில் பெலனும் ஞானமும் உண்டு" (வ.16) என்று சொல்லப்பட்டுள்ளது.

இப்படி எவ்விதத்திலும் ஒப்பிட முடியாத ஞானத்தையும், பெலத்தையும் ஒருங்கே பெற்றிருக்கும் தேவனிடத்திலிருந்து தான், மனிதனை இரட்சிக்கும்படியான சுவிசேஷம் வந்திருக்கிறது. ஆகவேதான், சுவிசேஷம் தேவபெலன் என்று ஆவியானவர் விளம்பியிருக்கிறார். இது குறித்து பவுலடியார், ரோமாபுரியாருக்கு எழுதும் போது, "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" என்று கூறியுள்ளார். (ரோமர் 1:16). தேவன் தம்முடைய அநந்த ஞானத்தினாலும், அளவிடவே முடியாத பெலனத்தினாலும், பாவியான மனிதனை இரட்சித்து, அவனை நித்தியகாலமெல்லாம் தன்னோடு வைத்திருப்பதற்கு சுவிசேஷத்தை விட சிறந்த வழியில்லையென்று கண்டார். அப்படியானால், இந்த சுவிசேஷம் எவ்வளவு சிறப்பானதாக, மேன்மையானதாக இருக்கிறதென்று பாருங்கள்!.

சுவிசேஷம் என்றால் "நற்செய்தி" அதாவது, நல்ல செய்தி. கிரேக்க மொழியில், "சுவிசேஷம்" என்ற வார்த்தைக்கு, "வெற்றி பற்றிய அறிவிப்பு" என்று ஒரு பொருள் இருந்தது. பின்னாளில், இது, "மகிழ்ச்சியைக் கொண்டு வரும் செய்தி" என்று மாறியது. இந்த

இரண்டாவது பொருள் தான் சரியான பொருளாக இருக்க வேண்டும். ஏனெனில், இதுதான் கிரேக்க மொழியில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டு வசனத்தோடு ஒத்துப் போகிறது. எப்படியெனில், இயேசு ஆண்டவரின் பிறப்பு குறித்து தேவ தூதன் மேய்ப்பர்களுக்கு அறிவித்த போது, "....பயப்படாதிருங்கள்; இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்றார் (லூக். 2:10).

இப்படி தேவ பெலனாகவும், எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்க கூடியதுமான சுவிசேஷமாகிய நற் செய்தியானது, "தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது" (1 தீமோ. 1:11) என்றும், "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1கொரி. 9:16) என்றும், "சுவிசேஷத்தை தைரியமாய்ச் சொல்ல எனக்காக ஜெபியுங்கள்" (எபே. 6:19) என்றும் கூறியுள்ளார். சுவிசேஷமானது எல்லாம் வல்ல தேவனுடைய பெலனாகவும், பவுலடியார் போன்ற தலைசிறந்த தேவ மனிதர்களை முற்றிலும் ஆட்கொண்டதாகவும் இருக்கிறதென்பதை அறியும்போது, அப்படி அந்த சுவிசேஷத்தில் என்னதான் இருக்கிறதென்ற ஒரு கேள்வி நியாயமாகவே எழும்புகிறது, அப்படித்தானே! கண்டிப்பாக, ஒன்றுமே இல்லாமல் அது தேவ பெலனாக இருக்க முடியாது. நிச்சயமாகவே அதில் ஏதோ இருக்கிறது.

ஆக, இப்பொழுது இந்த சுவிசேஷமாகிய நற்செய்தியில் என்ன தான் இருக்கிறதென்றும், அவைகள் எவையென்றும், அவைகள் ஏன், அப்படி தேவ பெலனென்றும் பார்த்து விடுவோம்.

### I. விசுவாசிப்பதற்கான உண்மைகளைக் கொண்டுள்ளது

சுவிசேஷமாகிய நற்செய்தியானது தேவ பெலனாயிருப்பதற்கான காரணங்களில் முதலாவது, காரணம், நற்செய்தியானது, விசுவாசிப்பதற்கான உண்மைகளைக் கொண்டுள்ளது என்பது.

கிறிஸ்துவின் சுவிசேஷமானது, பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகிப் போன எல்லோரும் பரலோக பாக்கியம் பெற ஒரு ஐந்து காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறுகிறது. அவைகளில் முதன்மையானது விசுவாசம். பிதாவாகிய தேவனையும், இயேசுவையும் விசுவாசிப்பதோடு சுவிசேஷம் தேவ பெலன் என்பதையும் (ரோமர் 1:16). அந்த சுவிசேஷம் ஒருவனை இரட்சிக்கிறது (மாற்கு 16:16) என்பதையும் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, ஒருவன் தன் கடந்த காலப் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். "மனந் திரும்புங்கள்" என்பது தான்

இயேசுவாலும், யோவான் ஸ்நானகனாலும் மையப்படுத்திச் செய்யப்பட்ட பிரசங்கம் (மத். 3:2,4:17)பெந்தெகொஸ்தே நாளில் திரளாகக் கூடியிருந்தவர்களிடம் பரிசுத்த ஆவியினால் நிறைந்த பேதுரு, ".....நீங்கள் மனந்திரும்புங்கள்" (அப். 2:38) என்றே கூறினார். புகழ் பெற்ற மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில் பவுலடியார் வலியுறுத்தியதும் "மனந்திரும்புதல்" பற்றித்தான் (அப். 17:30). ஆகவே, மனந்திரும்புங்கள் என்னும் போதனையை விசுவாசிப்பது அவசியம்.

அதையடுத்து, அறிக்கையிடுதல். அறிக்கையிடுதல் என்று சொல்லும்போது, தங்கள் கடந்த காலப் பாவங்கள் எல்லாவற்றையும் ஒருவன் அறிக்கை செய்தாக வேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள். இது வேதத்திற்கு முரணான உபதேசம். எந்த ஒரு மனிதனுக்கும் அவன் செய்த எல்லாப் பாவங்களும் நினைவில் இராது. ஆக, அறிக்கை என்பது இதுவல்ல. மாறாக, "இயேசுவை தேவனுடைய குமாரனென்று" அறிக்கை செய்ய வேண்டும். எத்தியோப்பிய மந்திரி இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று அறிக்கை செய்து தான் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் (அப். 8:37).

பிறகு, ஞானஸ்நானம். ஞானஸ்நானம் மட்டும் தான் ஒருவனுடைய கடந்த காலப் பாவங்களைக் கழுவுகிறது (அப். 22:16). ஓர் ஒளியோ, சத்தமோ, தரிசனமோ அல்லது ஓர் உபவாசமோ பாவத்தைப் போக்காது. அப்படிப்போக்குவது உண்மையானால், இயேசுவால் சந்திக்கப்பட்ட பவுலாகிய சவுல் ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டிய அவசியமேயில்லை. பின்னாளில், பேதுரு அப்போஸ்தலன் கூறும் போது ஞானஸ்நானம் தான் ஒருவனை "இரட்சிக்கிறது" என்று தெளிவுபடுத்தியுள்ளார் (1பேதுரு. 3:21).

கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்படியான இந்த உபதேசச் சட்டங்களை ஒருவன் விசுவாசிப்பதோடு, மரண பரியந்தம் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டுமென்ற உபதேச உண்மைகளை விசுவாசிப்பது அவசியம்.

தேவ பெலனாகிய சுவிசேஷமானது இவ்வளவு மகத்தான உண்மைகளைக் கொண்டுள்ளது. தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் ஒருவன் இவ்வுண்மைகளைத் தன் வாழ்வில் விசுவாசிக்க வேண்டியவனாயிருக்கிறான். அப்படியானால், அருமையானவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் தேவ பெலனால் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகளை உங்கள் வாழ்வில் விசுவாசிக்கிறீர்களா?.

### II. கீழ்ப்படிவதற்கான கட்டளைகளைக் கொண்டுள்ளது

சுவிசேஷமாகிய நற்செய்தியானது தேவ பெலனாயிருப்பதற்கான காரணங்களில் இரண்டாவது காரணம், நற்செய்தியானது கீழ்ப்படிவதற்கான கட்டளைக் கொண்டுள்ளது என்பது.

உலகில் உள்ள எல்லா மனிதரும் விசுவாசிக்கும்படியான நிரூபிக்கப்பட்ட உண்மைகளைக் கொண்டிருக்கும் தேவ பெலத்தின்படியான சுவிசேஷம், எல்லாரும் கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆலோசனை என்பது வேறு, கட்டளை என்பது வேறு. ஆலோசனை என்பது கட்டாயம் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கான ஒன்றல்ல. ஆனால், கட்டளை என்பது கட்டாயம் கீழ்ப்படிந்தே ஆக வேண்டிய ஒன்று. ஆனால், வேத வசனங்கள் தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படியாமல் போனாலே தண்டனை உண்டு என்று கூறுகிறது. "பரிசேயரும், நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்" என்று (லூக். 7:30). ஆலோசனைக்குக் கீழ்ப்படியாமல் போனதற்கே "கேடு உண்டென்றால்", தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனால் என்ன நடக்கும் என்று எண்ணிப்பாருங்கள்!

இயேசு ஆண்டவர் சீடர்களுக்குக் கொடுத்த பிரதான கட்டளையை கவனியுங்கள். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத். 28:19,20). இதே கட்டளையை மாற்கு ஆசிரியர் எழுதும்போது, "....நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16) சொல்லியுள்ளார். இயேசுவின் கட்டளைக்கு ஒருவன் கீழ்ப்படியவில்லையென்றால் தண்டனை உறுதி என்று இவ்வசனங்கள் கூறுகிறது. அப்படியானால், ஒருவன் செய்ய வேண்டியது என்ன? சுவிசேஷத்தின் கட்டளைகளுக்கு எல்லோரும் கீழ்ப்படிய வேண்டும்.

கிறிஸ்தவம் கற்பனையானவைகளின் தொகுப்போ அல்லது கட்டுக்கதைகளின் இருப்பிடமோ அல்ல. கிறிஸ்தவம் முழுக்க முழுக்க உண்மைகளை, நிரூபிக்கப்பட்ட உண்மைகளை, மறுக்கவே முடியாத உண்மைகளை அடிப்படையாகவும், ஆதாரமாகவும் கொண்டுள்ளது. தேவ பெலனாகிய சுவிசேஷம் இல்லையானால், கிறிஸ்தவம் என்பதே இல்லை. இப்படிப்பட்ட சுவிசேஷம் வெளிப்படுத்தும் உண்மைகளை, குறிப்பாக, கிறிஸ்துவானவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்னும் உண்மையை ஒருவன் விசுவாசிப்பது அவசியம். கிறிஸ்து, மனிதர்களெல்லாருடைய பாவங்களுக்காகவும் மரித்தது ஏதோ தற்செயலாக

நடந்த ஒன்று அல்ல. ஏனெனில், இப்படி இயேசு மரிப்பார் என்னும் உண்மை, அவர் இப்பூமியில் பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகள் முன்னதாகவே ஏசாயா தீர்க்கனால் தத்ரூபமாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. *"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்".* (ஏசாயா 53:4,5). புதிய ஏற்பாட்டில் உள்ள செய்தி நூல்கள் நான்கும் இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை மிகவும் விவரமாகக் கூறுகிறது. (மத். 27:31-56; மாற்கு. 15:20-41; லூக். 23:26-38; யோவான் 19:16-30)

அடுத்து, மரித்த இயேசு உயிரோடே எழுந்தார் என்பதை விசுவாசித்துக் கீழ்ப்படிய வேண்டும். எருசலேமில் கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்ட கல்லறை இன்றும் திறந்து கிடக்கிறது. ஆம், திறந்து கிடக்கும் இக்கல்லறையை நேரில் காணும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது. இயேசு உயிரோடே எழுந்தார் என்னும் பேருண்மையை, அதே எருசலேம் பட்டணத்தில், பெந்தெகொஸ்தே நாளில், அவரைக் கொலை செய்து திரளாய்க் கூடியிருந்த யூதர்களுக்கு மத்தியில் பேதுரு பகிரங்கமாக அறிவித்தார். "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்..." என்று (அப். 2:24).

அதையடுத்து, உயிரோடு எழுப்பப்பட்ட இயேசுவானவர், ஆண்டவராகவும், கிறிஸ்துவாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறார் (அப். 2:33-36) ஆம், அவர் எல்லாவற்றுக்கும் தலையாயிருக்கிறார் (எபே. 1:20-23). பேதுரு அப்போஸ்தலன் பின்னாளில் இது பற்றிக் கூறும்போது, "அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" என்று (1பேதுரு 3:22). இந்த உண்மையையும் ஒருவன் விசுவாசித்து, உயிர்த்த இயேசுவுக்காக அவைகளைச் செய்ய வேண்டும்.

இன்னும், இயேசுவானவர் "மீண்டும் வரப்போகிறார்" என்கிற உண்மையை ஒருவன் விசுவாசிக்க வேண்டும். இயேசுவானவர் வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறு

படியும் வருவார் என்றார்கள்" (அப். 1:11). அதுமாத்திர மல்ல, வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரத்தில் மட்டும், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று மூன்று முறை (வெளி. 22:7,12,20) சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, கிறிஸ்துவின் வருகைக்காய் நம்மை ஆயத்தமாக்கும்படி, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசங்கள் ஒவ்வொன்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும்.

**III. பெற்றுக் கொள்ளும்படியான வாக்குத்தத்தங்களைக் கொண்டுள்ளது.**

சுவிசேஷமாகிய நற்செய்தியானது தேவ பெலனாயிருப்ப தற்கான இன்னுமொரு காரணம், அது பெற்றுக்கொள்வதற்கான வாக்குத்தத்தங்களைக் கொண்டுள்ளது என்பது.

ஆம், சுவிசேஷம் விசுவாசிக்கும்படியான உண்மைகளை யும், கீழ்ப்படியும்படியான கட்டளைகளையும் கொண்டுள்ள தோடு, பெற்றுக்கொள்ளும்படியான ஆசீர்வாதங்களையும் தன்னுள் கொண்டுள்ளது. நம்முடைய தேவனும், நம்முடைய இரட்சகரும் ஒன்றைச் செய்ய சொல்லிவிட்டு நம்மை வெறுமனே அனுப்புகிறவர்கள் அல்ல. ஒரு கலசம் தண்ணீருக்கு பலன் உண்டு என்று சொல்லும் நமது இரட்சகர் (மத். 10:42) அவருக்காக இவ்வளவு காரியங்களை நாம் செய்யும்போது நம்மை வெறுமனே விடுவாரா?

தேவ பெலனாகிய நற்செய்திக்குக் கீழ்ப்படிவதால் ஒருவன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆசீர்வாதங்களைப் பாருங்கள். முதல் ஆசீர்வாதம் பாவமன்னிப்பு. பாவ விமோசனம் வேண்டுமென்று உலகெங்கிலுமுள்ள மக்கள் விதவிதமான முயற்சிகளைச் செய் கிறார்கள். ஆனால், அவைகள் எதுவும் அவர்களுக்குப் பாவ விமோசனத்தைப் பெற்றுத்தராது. பாவங்களைச் சுத்திகரிக்கும் வல்லமை இயேசுவின் இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு (1யோவான் 1:7). ஆகையால், தேவபெலனாகிய சுவிசேஷத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும்போது மட்டுமே ஒருவருக்கு பாவத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது.

அடுத்து, பரிசுத்த ஆவியின் வரம். இந்த வரம் குறித்து இயேசு ஆண்டவர் இப்பூமியிலிருந்த நாட்களில் பேசியிருக்கி றார். "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவி யைக் குறித்து இப்படிச் சொன்னார்". இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்பட விலை (யோவான் 7:39). பெந்தெகொஸ்தே நாளில் "பேதுரு அவர்களை நோக்கி; "*நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்*" என்று பரிசுத்த ஆவியின் வரத்தை வாக்குத்தத்தம் செய்தார் (அப். 2: 38).

அத்தோடு, தேவபெலனாகிய நற்செய்திக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு இம்மையிலே பரிபூரண ஜீவனும், மறுமையிலே நித்திய ஜீவனும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இயேசு ஆண்டவர் இப்பூமியில் இருந்த நாட்களில், "*திருடன் திருடவும் கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்*" என்றார். (யோவான் 10:10) இன்னும் பவுலடியார் ஆவியின் துணையால், தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தமகுமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "*சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது*" என்றர். (1தீமோ. 4:8)

மேலும், இனிவரும் ஜீவனுக்கான வாக்குத்தத்தம் பற்றி அதே பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும்போது இவ்விதமாகக் கூறுகிறார். "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23). இங்கே பேசப்படும் நித்திய ஜீவன் நியாயத்தீர்ப்பின் போது கிடைக்கும் பலன். "*அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்*" (மத். 25:46).

ஆகையால், அருமையானவர்களே, மேற்சொன்ன வசனங்கள், தேவபெலனாகிய சுவிசேஷம், நாம் இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக்கொள்ளும்படியான வாக்குத்தத்தங்களைக் கொண்டுள்ளது என்று திட்டமும், தெளிவுமாகச் சொல்லுகிறது. இந்த ஆசீர்வாதங்களை ஒருவன் பணத்தினாலோ, பலத்தினாலோ, அதிகாரத்தினாலோ, ஆட்சியினாலோ, செல்வத்தினாலோ, செல்வாக்கினாலோ, பட்டத்தினாலோ அல்லது பதவியினாலோ பெற்றுக்கொள்ள முடியாது. தேவபெலத்தினாலான சுவிசேஷம் தான் அதற்கு ஒரே வழி.

ஆகையால், இவ்வுண்மைகளை நாம் அறிந்து, இரட்சிப்பை அருளும் தேவ பெலனாகிய சுவிசேஷத்திற்கு நம்மை சமூலமாக ஒப்புக்கொடுப்போம். அப்படி ஒப்புக் கொடுப்பதற்குத் தடையாக இப்பூமியில் எது இருந்தாலும் அவைகளைத் தகர்த்துப் போட்டு, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு அடி பணிவோம். அதன் மூலம் பரலோக பாக்கியத்தை உறுதி செய்து கொள்ளுவோம். ஆமென்.

# ஏன் நாங்கள் ஜெபத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

**ஜெ**பம் என்பது ஒரு வேதாகம மைய நோக்கம். ஜெபம் என்பது தேவனிடம் பேசுவது, சொல்வது அல்லது தேவனிடம் வேண்டிக் கொள்வது என விளக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிச் சொல்லியுள்ளார். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று (பிலி. 4:6).

தேவனுடனான நம் உறவில், அவர் நம் தகப்பனாயிருக்கிறார், கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். தேவனைப் பொறுத்தவரை அவருக்கு எதுவும் தேவை இல்லை. அவர் நித்தியமானவர், சர்வவல்லவர். அவர் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறார். எனவே தான், யாக்கோபு இப்படிச் சொல்கிறார். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக். 1:17). பிள்ளைகளாயிருக்கும் நமக்கு தேவன் தேவை. தேவன் நம் தகப்பனாயிருக்கிறார். நாம் நம்முடைய எல்லாத் தேவைகளுக்கும், சோதனைகளை மேற் கொள்வதற்கான உதவிக்கும், பாவம் செய்யும் போது பாவ மன்னிப்படைவதற்கும் நாம் தேவனிடம் செல்ல வேண்டும்.

இப்போது ஜெபம் பற்றியும், கர்த்தரிடம் விண்ணப்பம் செய்வது பற்றியும், நம்முடைய ஜெபங்களைக் கேட்டு பதிலளிப்பதாக அவர் தந்திருக்கும் உத்திரவாதம் பற்றியும் பேசுகின்ற சில வேத வசனங்களை நாம் பார்க்கலாம். கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த சீடர்களிடம் இப்படிச் சொன்னார். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவான் 14:13,14). மறுபடியும் இயேசு, "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவான் 15:7,8) என்று சொன்னார்.

இயேசு இவ்விதமாகவும் சொன்னார். "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்க, நீங்கள் போய்க்கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான் 15:16).

மலைப்பிரசங்கத்தின் போது இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் என்றார் (மத். 7:7,8).

அப்போஸ்தலனாகிய யோவான், நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 5:14,15) என எழுதியுள்ளார்.

மேலே நாம் வாசித்த வேத வாக்கியங்களிலிருந்து நாம் எப்படிப்பட்ட விண்ணப்பத்தைச் செய்தாலும், எவ்வித முன் நிபந்தனைகளும் விதிக்காமல், கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு ஜெபத்திற்கும் பதில் அளிப்பார் என்று நாம் முடிவுக்கு வர முடியும். ஆனால், வேத வாக்கியங்களை நாம் சற்று நெருக்கமாகப் பார்க்கும் போது, தேவனால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஜெபத்தையும், தேவன் கேட்டு பதில் தரக்கூடிய ஜெபத்தையும் செய்வதில் எண்ணற்ற காரியங்கள் சம்பந்தப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

முதலாவது, ஒருவருடைய ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமானால் அவர் கிறிஸ்தவனாக, தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டும் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன. "பாவிகளுக்கு தேவன் செவி கொடுப்பதில்லை"யென்று யோவான் 9:32-ல் நாம் வாசிக்கிறோம். பாவிக்கு தேவன் ஏன் செவி கொடுக்கமாட்டார்? பாவத்தின் காரணமாக தேவனுக்கும், அவரிடத்தில் ஜெபிக்க முயற்சிக்கும் தனிப்பட்ட நபருக்கும் இடையில் பாவம் வருகிறது. நீண்ட காலத்திற்கு முன்பு தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். "இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர்

உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59:12). மறுபடியும், ஒரு பாவி, தான் தேவனுடைய பிள்ளையாக இல்லாத போது, அந்த தேவன் தன்னுடைய தகப்பனாக இல்லாத போது எப்படி தேவனை அணுக முடியும்? ஒரு பாவி தேவனிடத்தில் ஜெபித்து, தேவன் தன் ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதிலளிப்பார் என எதிர் பார்த்தால், ஒரு கிறிஸ்தவனுக்கு, கிறிஸ்தவனல்லாதவனை விட என்ன மேன்மை இருக்கும்? தேவனிடத்தில் ஜெபிப்பது என்று வரும் போதும், தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு பதிலளிப் பார் என்று நம்பிக்கை கொள்ளும்போதும், சிலர் நினைப்பதற்கு மாறாக, ஒருவன் கிறிஸ்தவனாக இல்லாமல் இருப்பதற்கும், ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாவது, ஒரு தேவனுடைய பிள்ளையின் ஜெபங்கள் கேட்கப்பட வேண்டுமானால், அவன் நீதியுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும் இருக்கவேண்டுமென்று தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. பேதுரு தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதினார். "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிற வர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1பேதுரு 3:12). ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்தாலோ அல்லது தேவனை விட்டு வழிதப்பிப் போனாலோ அவன் மனந்திரும்ப, தன் தவறுகளை அறிக்கையிட்டு, அவன் மன்னிப்பைப் பெறும் படி கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும். யாக்கோபு இப்படிச் சொல்கிறார். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங் களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்கோபு 5:16).

மாய வித்தைக்காரனாகிய சீமோன் கர்த்தருக்குக் கீழ்ப் படிந்து, தேவனுடைய பிள்ளையாக மாறின பிறகு, சில குறிப் பிட்ட சமாரிய கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெறும்படி பேதுருவும், யோவானும் அவர்கள் மீது கைகளை வைக்கக் கண்டு, தேவனுடைய வரத்தைப் பணத்தினால் வாங்க முயற்சித்தான். அதற்கு பின்பு என்ன நடந்தது என்பதை கவனி யுங்கள். " பேதுரு அவனை நோக்கி; தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடி யால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை, ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவ னை நோக்கி வேண்டிக் கொள்; ஒருவேளை உன் இருதயத்தின்

எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாக காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன் : நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான் (அப். 8:20,24). சீமோன் மனந்திரும்பி, மன்னிப்பு கேட்டிருக்காவிட்டால் அவன் தேவனிடத்தில் தொடர்ந்து ஜெபித்து, தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக நடந்திருக்க முடியும் என்று நம்மால் ஒரு நிமிடம் கற்பனை செய்து பார்க்க முடியுமா? நிச்சயமாக அப்படி நடந்திருக்காது.

மூன்றாவது, அவரைப் பின்பற்றுபவர்கள் தங்களுடைய ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு வெறுமனே அவரிடத்தில் வேண்டிக் கொண்டால் போதுமானதாயிருந்தது என்பது போல் தெரியும். ஆனால், வசனங்களைக் கவனித்தால், அந்த வசனங்களில் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருப்பதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ, கர்த்தர் அதற்கான குறிப்பிட்ட நிபந்தனைகளைத் தந்துள்ளதைக் காணலாம். உதாரணத்திற்கு, கிறிஸ்து, "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று யோவான் 14:14-ல் சொன்னார். ஆனால், அடுத்த வசனத்திலேயே கிறிஸ்து, " நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று சொன்னார். தேவனுடைய பிள்ளை தேவனிடத்தில் எதை வேண்டிக்கொண்டாலும் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து கற்பனைகளை கைக்கொள்ளவில்லையென்றால், கர்த்தர் எதையாவது கொடுப்பார் என கற்பனை செய்து பார்க்க முடியுமா? யோவான் 15:7-ல் இயேசு இப்படியாகச் சொன்னார். " நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்" என்று.

ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திருந்து, கர்த்தருடைய வார்த்தை அவருக்குள் நிலைத்திருந்தால், அந்த நபர் எப்படிப்பட்டவராயிருப்பார்? நிச்சயமாக அப்படிப்பட்டவர் ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாயிருப்பார். ஆனால், ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திராமல், கர்த்தருடைய வார்த்தை அவருக்குள் நிலைத்திராமல் இருந்தால், அந்த நபருடைய வேண்டுதலுக்கு கர்த்தர் பதில் கொடுப்பாரா? நிச்சயமாகக் கொடுக்க மாட்டார்.

யோவான் 15:16-ல் இயேசு, " நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார் என்று சொன்னார். ஆனால், இந்த வசனத்தின் முதல் பகுதியில் இயேசு தான் அவர்களைத் தெரிந்து கொண்டு அவர்கள் கனி கொடுக்கும்படிக்கு அவர்களை ஏற்படுத்தியதாகச் சொன்னார். இங்கே இயேசு அப்போஸ்தலர்களிடம் பேசிக்

கொண்டிருக்கிறார். ஆனால், அவர்கள் கனி கொடுக்காமல் இருந்திருந்தால் கர்த்தர் அவர்களுடைய வேண்டுதல்களுக்கு பதில் கொடுத்திருப்பார் என உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? மறுபடியும் கிறிஸ்து, ஒருவன் கேட்டால் அவன் பெற்றுக்கொள்வான் என்று வாக்குத்தத்தம் செய்தார் (மத். 7:7,8). கிறிஸ்து தொடர்ந்து இப்படிச் சொல்கிறார். "உங்களில் எந்த மனுஷனாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத். 7:9-11). இந்த வசனங்களின்படி, இங்கே கிறிஸ்து, உண்மையுள்ள பிள்ளைகளாயிருந்து, தகப்பன்-மகன் உறவிலிருக்கிற சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். வேத வசனங்களை நீங்கள் படிக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அவருக்குக் கீழ்ப்படிய விருப்பமுள்ளவர்களுக்கும், அவருக்கு உண்மையாயிருப்பவர்களுக்கு மட்டும் தான் என்பதை எப்பொழுதும் நீங்கள் கவனிக்க முடியும். கீழ்ப்படியாதவர்களை, கலகக்காரர்களை அவர் எப்படி ஆசீர்வதிக்க முடியும்?

இறுதியாக, 1 யோவான் 5:14,15 வசனங்களில், நம் ஜெபங்கள் தேவனுடைய சித்தத்தின்படி இருந்தால், அவைகளைக் கேட்டு தேவன் பதிலளிப்பார் என்று யோவான் தெளிவுபடுத்தியிருக்கிறார். பிள்ளைகளை நேசிக்கிற ஒரு தகப்பன், பிள்ளைகளுக்குத் தீங்கு செய்கிறவைகளை அவர்கள் கேட்டாலும் கொடுக்க மாட்டான். நம்முடைய பரம பிதாவின் காரியத்திலும் இது உண்மையாயிருக்கிறது. சில காரியங்கள் நமக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமென்று நாம் நினைப்போம். ஆனால், சர்வ ஞானமுள்ள நம் பிதா அதை வேறுவிதமாகப் பார்ப்பார். இங்கே, ஒரு காரியத்தை நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும். அது, நம் அன்புள்ள தகப்பன் நமக்கு எது சிறந்ததாயிருக்குமோ அதற்கேற்றபடி பதிலளிப்பார். நாம் உண்மையாகவே கர்த்தரிடம் அன்பு கூர்ந்தால் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் என்கின்ற பவுலின் வாக்கியம் நம் நினைவில் இருக்க வேண்டும் (ரோமர் 8:28).

நாம் எப்போதுமே நோக்கிப் பார்ப்பதற்கு நமக்கு ஒரு பிதா இருப்பதால், கிறிஸ்தவர்களாக நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து மனிதர்கள் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார் (லூக். 18:1). நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் என்று பவுல் சொன்னார் (1 தெச. 5:17)

ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறதென்று (அப். 2:42). மறுபடியும், யாக்கோபு ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன் என்று சொல்கிறார் (யாக். 5:13). தொடர்ந்து யாக்கோபு சொல்லும் போது, நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்கிறார் (யாக். 5:16). வியாதியில் இருப்பவர்களுக்குக்காக நாம் ஜெபிக்கும் போது அற்புதங்கள் மூலம் கிரியை செய்வதாக கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ண வில்லை. ஆனால், ஜெபங்கள் மிகப் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். தேவன் இயற்கை விதிகள் மூலமாக, மருந்துகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மூலமாக நோயாளியை சுகப் படுத்துவதற்கு கிரியை செய்வார். தேவன் தம்முடைய தீர்மானத் தின்படி காரியங்களை மாற்ற கிரியை செய்யும் வழியையும், விதத்தையும் பெரும்பாலும் நாம் குறைத்து மதிப்பிட்டு வருகிறோம். சில வேளைகளில், நாம் தேவன் தம்முடைய வல்லமையைக் காட்டுவதற்கான ஒரே வழி அல்லது தேவனால் ஏதோ ஒன்றை செய்ய முடியும் என்று காட்டுவதற்கான ஒரே வழி அற்புதம் தான் என்று நினைக்கிறோம். ஆனால், அது அப்படி யல்ல. நம்முடைய விசுவாசம் எங்கே? மேலும், பிணியாளிக்குத் தான் வைத்தியன் தேவை என்று இயேசு சொன்னார், அதே வேளையில் நாம் நம் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பார்க்கக் கூடாது (மத். 9:12; மத். 4:7).

நிச்சயமாகவே, நம்முடைய ஜெபங்கள் பிதாவினால் கேட்கப்படவேண்டுமென்றால், நமக்காகப் பரிந்து பேசுகிற வரும், மத்தியஸ்தரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து வின் நாமத்தினாலே நாம் ஜெபிக்க வேண்டும். (1 யோவான் 2:1; 1 தீமோத். 2:5; எபி. 3:1).

ஜெபத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? பிதா உங்கள் ஜெபங்களைக் கேட்டு உங்கள் வேண்டுதல்களை நிறைவேற்று வார் என்கிற நிச்சயத்தோடு உங்களால் ஜெபிக்க முடிகிறதா? நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால் பிதாவிடம் ஜெபிக்கத் தக்கதான உறவில் நீங்கள் இல்லை. அப்படிப்பட்ட உறவை நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கை யிட்டு பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம், பெற்றுக் கொள்ளலாம் (எபி. 11:6; யோவான் 14:1; மத். 10:32; அப். 2:38). இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் உங்க ளை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப். 2:47). பின்பு, கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தின ராக, கர்த்தருடைய பிள்ளையாக உண்மையாயிருந்தால், தேவன் உங்கள் ஜெபங்களைக் கேட்டு அவைகளுக்கு பதில் தருவார் என்கின்ற வாக்குத்தத்தம் உங்களுக்கு இருக்கிறது. ✝

# நிழலும், நிஜமும்

(The Shadow and the Reality)

## Bro. ஜேம்ஸ் ராஜ்குமார்

அன்பானவர்களே,

சென்ற மாதத்தில் பழைய ஏற்பாடாகிய நியாயப் பிரமாணத்தை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டுமா வேண்டாமா என்கிற விவாதத்திற்கு எருசலேமுக்கு போக வேண்டுமென்று தீர்மானித்தார்கள் என்று நிறைவாக பார்த்தோம்.

இப்பொழுது அதன் தொடர்ச்சியாக ஏன் அவர்கள் எருசலேமுக்குப் போகவேண்டும் என்கிற முடிவு எடுத்தார்கள், அந்தியோகியா சபையிலேயே ஏன் இதற்கு ஒரு தீர்வு காண முடியாமல் போனது என்று பார்ப்போம். ஏனெனில், அங்கு தீர்க்கதரிசிகளும், போதகர்களும் ஏற்கனவே இருந்தார்கள் என்று அப். 13:1ல் நாம் வாசிக்கிறோமே.

இன்றைக்கு நம் கையில் இருப்பதைப் போல அன்றைக்கு அவர்கள் கையில் அச்சடிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு வேதாகமம் இல்லை. இன்றைக்கு வேதத்தில் அல்லது உபதேசத்தில் சந்தேகம் அல்லது கேள்விகள் எழுந்தால் முழு வேதத்தையும் ஆராய்ந்து எது சரி, எது சரியில்லை அல்லது எது உண்மை, எது பொய் என்பதை நம்மால் ஆராய்ந்து தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அன்றைக்கு எழுதப்பட்ட வேதாகமம் அவர்கள் கையில் இல்லாததால் அவ்வாறு அவர்களால் அறிய முடியவில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் அங்கு இருந்தாரே, ஏன் அவர் அதற்கு முடிவு சொல்லவில்லை என்கிற கேள்வி இங்கே எழலாம். முதலாவது, பவுல் ஒரு அப்போஸ்தலனா? என்கிற கேள்வி அந்நாட்களிலே இருந்தது. ஏனென்றால், ஒருவன் அப்போஸ்தலனாய் இருக்க வேண்டுமானால் அப்போஸ்தலர் நடபடிகள் 1:21, 22 வசனங்களில் சொல்லப்பட்ட தகுதிகள் ஒருவனுக்கு இருந்தால் தான் அவன் அப்போஸ்தலனாயிருக்கத் தகுதிப் பெற்றவன் ஆவான். அப். 1:21,22 வசனங்களில் பேதுரு பேசும்போது, ஒருவன் அப்போஸ்தலனாய் இருக்க வேண்டுமானால், "யோவான் (ஸ்நானன்) ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து (அப்போஸ்தலர்களிடத்திலிருந்து) உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட (அப்போஸ்தலருடனே கூட) இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களுடனே கூடச் சாட்சியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார் ". இந்த வேதவாக்கியம் சொல்லுகிற நிபந்தனையின்படி இயேசு கிறிஸ்வோடு மூன்றரை ஆண்டுகள் அவருடைய ஊழியத்தையும்,

மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலையும், பரமேறிச் செல்லு தலையும் கண்ணால் கண்டவராக அதற்குச் சாட்சியாக இருப்ப வரே அப்போஸ்தலனாக இருக்க முடியும்.

ஆகையால், பேதுரு, இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்தைக் குறித்துப் பேசும்போது, அப். 1:17-ல் "அவன் எங்களில் (அப்போஸ்தலர்களில்) ஒருவனாக எண்ணப் பட்டு, இந்த ஊழியத்திலே (அப்போஸ்தல ஊழியத்திலே) பங்கு பெற்றவனாயிருந்தான்" என்கிறார். எல்லோராலும் அப்போஸ்த லர்கள் ஆக முடியாது. ஏனென்றால், அப்போஸ்தலர்கள் என்பவர் களை இயேசு கிறிஸ்துவானவர் ஒரு இரவு முழுவதும் ஜெபம் பண்ணி அவரோடு இருந்த சீஷர்களிலே 12 பேரைத் தெரிந் தெடுத்து அவர்களுக்கு "அப்போஸ்தலர்கள்" என்று பெயரிட் டார், லூக்கா 6:12,13. இவர்கள் இன்று வரைக்கும் கிறிஸ்துவுக்கு கண்கண்ட சாட்சிகளாயிருக்கிறார்கள், யோவான் 16:27; 1 யோ வான் 1:12. இவர்களுடைய சாட்சியைத்தான் வேதத்தின் மூல மாக இன்றைக்கு நாம் நம்ப வேண்டும்.

ஆனால், பவுல், இயேசு கிறிஸ்துவோடு ஊழியத்தில் மேற் சொன்ன நிகழ்ச்சிகளில் பங்கு பெறவில்லை என்பதற்காக அந்நாட்களில் பவுலை ஒரு அப்போஸ்தலனாக ஏற்றுக்கொள்ள கஷ்டப்பட்டார்கள். ஆகையால், அவர் கொரிந்தியருக்கு நிருபம் எழுதும்போது 9-ம் அதிகாரத்தில், தான் ஒரு அப்போஸ்தலன் தான் என்று உறுதிப்படுத்திக் கூறுவதோடு, முதலாம் வசனத்தில் நான்கு கேள்விகளை கேட்கிறார். நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா? என்று கேட்டவர், இரண்டாம் வசனத்தில் அதற்கான விளக்கமும் கொடுக்கிறார், "நான் மற்றவர் களுக்கு அப்போஸ்தலனாயிரா விட்டாலும், உங்களுக்கல்லவோ அப்போஸ்தலனாயிருக்கிறேன் கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே" என்கிறார் (1 கொரி. 9:1,2).

பவுல் அப்போஸ்தலனாயிருக்க தகுதியுள்ளவர். ஏனென் றால், கிறிஸ்துவானவர் எருசலேமில் ஊழியம் செய்த காலங்களில் பவுல் எருசலேமில் நியாயப்பிரமாணத்தை போதித்த பள்ளியில் பயின்றிருந்தார், இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது "நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்ட ணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே (எருசலேமிலே) கமாலியே லின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப் பிரமாணத்தின்படியே (பழைய ஏற்பாட்டின்படியே) திட்டமாய் போதிக்கப்பட்டு, இன்றைய தினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன் என்கிறார் (அப். 2:23).

மேலும், II கொரி. 5:16-ல் பவுல் "நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை

மாம்சத்தின்படி அறியோம்" என்று கூறுகிறார். இந்த வசனங்களின் படி, பவுல் கிறிஸ்துவை மாம்சத்தில் பார்த்தார் என்று தான் எண்ண வேண்டும். ஏனென்றால், பரிசேயர்கள் (யூதர்களில் ஒரு பிரிவினர்) அநேக நேரங்களிலே இயேசு கிறிஸ்துவோடு நீண்ட விவாதங்களிலே ஈடுபட்டார்கள் (யோவான் 8:13-59). அப்போஸ்தலனாகிய பவுலும் ஒரு பரிசேயன் (அப். 2:36). ஆகையால், பரிசேயர்கள் கிறிஸ்துவை சந்தித்தபோது பவுலும் அவர்களோடு இருந்திருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

இன்னும் சொல்ல வேண்டுமானால், அப்போஸ்தலனாகிய பவுல் மனுஷரிடம் சத்தியம் கற்றுக்கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்துவே அதை அவருக்கு வெளிப்படுத்தியதாகக் கூறுகிறார், "மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷனுடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்" என்கிறார், (கலாத். 1:11,12) பவுல் தன்னை ஒரு அப்போஸ்தலனாக உறுதி செய்யும்படி அவர் எழுதிய அநேக நிருபங்களிலே தான் ஒரு அப்போஸ்தலன் என்பதை முகவுரையிலேயே குறிப்பிடுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஆண்டவர் தரிசனமாகி புதிய சத்தியத்தை வெளிப்படுத்தியது போல - இன்றைக்கும் சிலர் தங்களை அப்போஸ்தலர்களாக அல்லது அப்போஸ்தலர்களுடைய வாரிசாக எண்ணிக்கொண்டு இயேசு கிறிஸ்து எங்களை சந்தித்தார், எங்களுக்கு (எனக்கு) தரிசனமானார், அவரே எங்களுக்கு எல்லாவற்றையும் போதித்து விட்டார் - நாங்கள் சொல்வதெல்லாம் உண்மை (சத்தியம்), நாங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு கண்கண்ட சாட்சிகளாயிருக்கிறோம். வேத வசனத்தைக் கேட்கமாட்டோம் என்று பிடிவாதம் பண்ணி, அதே அப்போஸ்தலனாகிய பவுல் போதித்த புதிய ஏற்பாட்டு சத்தியத்திற்கு விரோதமாகப் போதித்து தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறதுமல்லாமல் அநேகரையும் வஞ்சித்து, கிறிஸ்துவை விட்டும், அவருடைய புதிய ஏற்பாட்டு சத்தியத்தை விட்டும் தந்திரமான வழிகளில் மக்களை அவர்கள் திரும்பி வரமுடியாத அளவுக்கு சத்தியத்தை காதுகொடுத்து கேட்கக்கூடாத அளவுக்கு அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கி தூரமாக அழைத்துச் சென்று விடுகிறார்கள்.

இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு தன் இரண்டாம் நிருபத்திலே வேதத்தைக் கற்காமல் தங்கள் சொந்த இஷ்டமாக பேசுகிறவர்களை எச்சரிக்கும்படியாக (2பேதுரு 3:15:16) இந்த வசனங்களை எழுதுகிறார். இருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் ஒருவரே சொல்வதை விட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு இருந்து அவரிடத்தில் சத்தியத்தை கேட்ட (எபி. 23:4) அப்போஸ்தலர்களும் இதை உறுதிப்படுத்துவது சிறந்தது என்று எண்ணி எருசலேம் சென்றனர் எனலாம்.

அப்போஸ்தலர் நடபடிகள் 15-ம் அதிகாரம் முதலாம் வசனத்தின்படி இந்த உபதேசம் எருசலேமிலிருந்து வந்ததால்

அங்கேயே சென்று இதற்கு தீர்வு காண்பது சரியானது என்று நினைத்து அவர்கள் எருசலேமிற்கு செல்லத் தீர்மானித்தார்கள். மேலும், இவை அனைத்தும் தேவனுடைய தீர்மானமாய் இருந்தது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது நாம் எருசலேமில் நடந்த கூட்டத்தின் நிகழ்ச்சிக்குச் செல்வோம். நாமும் அந்த கூட்டத்தில் ஒருவராக இருந்ததாக எண்ணிக்கொள்வோம். சபையார் அனைவரும் கூடி வந்திருக்கிறார்கள், அப்போஸ்தலர்களும், மூப்பர்களும் அங்கே இருக்கிறார்கள். பரிசேய சமயத்திலிருந்த விசுவாசிகளான (கிறிஸ்தவர்களான) சிலர் ஒரு பக்கமாக ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து பேசுவதற்காக அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எதிர்பக்கத்திலே புதிதாக சில சகோதரர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அந்த புதிதான சகோதரர்களிலே இருவருடைய பெயர்கள் சொல்லப்படுகின்றன பவுல், பர்னபா இந்த பெயர்கள் ஏற்கனவே கேள்விப்பட்ட வல்லமையான ஊழியக்காரர்கள் பெயர்கள்தான். இப்பொழுது நேரில் வந்திருக்கிறார்கள், அவர்களை நேரில் பார்க்கும்படியான வாய்ப்பு சபையாருக்குக் கிடைத்திருக்கிறது. ஏதோ ஒரு எதிர்பார்ப்போடு ஒரு கருத்தைப் பற்றி விவாதிக்கும்படி அனைவரும் கூடியிருக்கிறார்கள் என்பது அனைவரது எதிர்பார்ப்பிலிருந்து தெரியவருகிறது.

முதலாவது பேசும்படியான வாய்ப்பு பரிசேய சமயத்திலிருந்து அதாவது யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களான சகோதரர்களுக்கு வழங்கப்படுகிறது. "அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை (புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களானவர்களை) விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்", (அப். 15:5). இந்தக் கருத்து அப்போஸ்தலர்கள், மூப்பர்கள் மற்றும் சபையார் முன்பு வைக்கப்பட்டது.

அதே நேரத்தில் புதிதாக வந்திருந்த சகோதரர்கள் இதற்கு எதிர்ரான அதாவது பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணத்தை புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு அதே கருத்தை உடையவர் களாயிருந்தார்கள். ஆகையால், அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள் (அப். 15:6) பரிசேய சமயத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்கள் புறஜாதி கிறிஸ்தவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைகொள்ளவேண்டும் என்றும்-அந்தியோகியா சபையிலிருந்து வந்திருந்த பவுலும் பர்னபாவும் அவர்களோடு வந்திருந்த சகோதரர்களும் புறஜாதி கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை அதாவது பழைய ஏற்பாட்டை கைகொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் தர்க்கம் பண்ணினார்கள். இப்படி இவர்களுக்குள் அந்தியோகியாவிலும் "மிகுந்த தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி" பேச ஆரம்பிக்கிறார். அனைவரும் அப்போஸ்தலனாகிய பேதுருவை கவனிக்கிறார்கள். அன்றைக்கு எருசலேமில் இருந்த அப்போஸ்தலர்கள் மூப்பர்கள் என்ன முடிவு செய்தார்கள் அல்லது தீர்ப்பு சொன்னார்கள் என்பதை அடுத்த மாதம் கவனிப்போமாக. ✝

வாலிபர் பகுதி

# நித்திய வீடு

**Bro. பென்னிமார்ட்டின்**

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே நீங்கள் பரலோகத்திலே தேவன் நமக்காக வைத்திருக்கிற நித்திய வீட்டைப் பற்றி எப்பொழுதாவது எண்ணியதுண்டா? வாலிபர்களாகிய நமக்கு மேலை நாடுகளுக்குப் போக வேண்டும், அங்கே குடியேற வேண்டும் என்கிற கனவுகளெல்லாம் வருகிறது. "ஆனால், இந்த உலகிலுள்ள எல்லாமே ஒரு நாள் அழிந்து போகும் தன்மையைத் தான் பெற்றிருக்கிறது. எனவே, நாம் மேலை நாடுகளுக்குப் போகப் பிரயாசப்படுவதை விட, அதை விட மேலான இடத்தில் தேவன் நமக்காக வைத்திருக்கும் நித்திய வீட்டை சுதந்தரிக்கப் பிரயாசப்பட வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் (II கொரி. 5:1)ல் பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" என்று நிச்சயமாக பரலோகத்தை சுதந்தரித்துக் கொண்டது போலச் சொல்கிறார். ஆம், அவர் சொல்வது முற்றிலும் சரியானதே. ஏனென்றால், பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு என்று சொல்லப்பட்டிருக்கும் நம் சரீரம் அழிந்து போகிறதாயிருக்கிறது. நம் சரீரம் நாளுக்கு நாள் தேய்ந்து அழிந்து போகும் விதத்திலேயே தேவனால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது (II கொரி. 4:16). நம்முடைய சரீரம் ஒரு கூடாரமாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அது தற்காலிகமானது, ஆனால், பரலோகத்திலே தேவன் நமக்காக வைத்திருக்கும் வீடு நித்தியமானது. இப்போது கூடாரத்திற்கும், நித்திய வீட்டிற்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்குப் புரிந்தி ருக்கும் என்று எண்ணுகிறேன். இப்படிப்பட்ட நித்திய வீட்டை ஆயத்தம் செய்யப்போகிறதாக நம் கர்த்தராகிய இயேசு வாக்குத் தத்தம் பண்ணியிருக்கிறார் (யோ. 14:2,3). அந்த நித்திய வீட்டில் குடியேற ஆசையாக இருக்கிறதா?.

## I. பரலோக நம்பிக்கை

நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதற்கான அஸ்திபாரமே மரணத்திற்குப் பிறகு உயிர்த்தெழுதல் உண்டு, நித்திய ஜீவன் உண்டு என்பது தான். வேறுவிதமாகச் சொன்னால் நாம்

கிறிஸ்துவுக்குள் மரிக்கும்போது, தேவனுடைய கற்பனைகள் எல்லாவற்றையும் கைக்கொள்ளும் போது, இந்த பூமியில் இருந்து கொண்டே பரலோகத்திலே நமக்கு ஓர் இடத்தை உறுதி செய்து கொள்ளுகிறோம். இதுதான் நம்மையும், மற்ற புறஜாதி மக்களையும் வித்தியாசப்படுத்துகிறது, அவர்களைப் பொறுத்த வரை, வாழ்க்கை மரணத்தோடு முடிந்து விடுகிறது, ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமக்கோ மரணத்திற்குப் பிறகு தேவனோடு என்றென்றும் வாழ்கின்ற நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை உண்டு. அந்த நித்திய ஜீவன் நமக்காக பரலோகத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. அந்த பரலோக நம்பிக்கை தான் நம்மை இந்த பூமியில் இயக்குகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கற்பனைகள் எல்லாவற்றையும் கைக்கொண்டால் அவர்களுக்கு கானான் தேசம் சுதந்தரமாக கொடுக்கப்படும் என்று தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது (உபா. 28:1-14). ஆனால், இன்று புதிய ஏற்பாட்டில் வாழும் நமக்கு தேவனுடைய கற்பனைகள் எல்லாவற்றையும் கைக்கொண்டால் அந்த பரமக் கானான் வாக்குதத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களை விட நமக்கு மேலான வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (எபி. 8:6). எனவே, அந்த நித்திய ஜீவனை நழுவ விடாமல் நாம் பற்றிக் கொள்ள வேண்டும். இந்த பூமியில் நாம் வாழும் நாட்களில் பரலோகத்தைப் பற்றிய சிந்தையும், வாஞ்சையும் உடையவர்களாக இருந்தால் தான் நாம் அங்கே போக முடியும். தேவன் வேதாகமத்தில் தம்முடைய தாசர்களைக் கொண்டு பரலோகத்தைப் பற்றிய காட்சிகளை வசனத்தில் படம் பிடித்துக்காட்டியிருக்கிறார், அவைகளை நாம் பார்க்கும்போது, படிக்கும் போது, பரலோகத்திற்குப் போக வேண்டும், இந்த பூமிக்குரிய பாடுகளிலிருந்து விடுபட்டு அந்த பரம வசாஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருப்போம் (2 கொரி. 5:2; பிலிப். 1:23). இப்போது பரலோகத்தைப் பற்றி தேவன் எவ்விதமாக விவரிக்கிறார் என்று பார்ப்போம்.

## II. பரலோகம் எப்படி இருக்கும்?

பரலோகம் இப்பூலோகப் பாடுகளிலிருந்து நமக்கு இளைப்பாறுதலைத் தரும் ஸ்தலமாக இருக்கிறது (வெளி. 14:13); அது சந்தோஷத்தின் இடமாக இருக்கிறது (மத். 25:21). வெளிப்படுத்தின விசேஷம் 21,22 அதிகாரங்களில் யோவான் பரலோகத்தை தரிசனமாகக் காண்கிறார். அங்கே பரலோகம் தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிற ஒரு நகரமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப் போலவும், பளிங்கொளியுள்ள வச்சிரக்கல்லைப்

போலவும் இருந்தது, பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்தப் பொன்னாயிருந்தது (வெளி. 21:11-21). மேற்சொல்லப்பட்ட வசனங்களை நாம் சொல் அர்த்த ரீதியில் எடுத்துக் கொள்ள கூடாது. இவைகளெல்லாம் பரலோக மகிமையை, மேன்மையை மனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று உருவக நடையில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. பரலோகம் என்பது நாம் தொட்டுப் பார்க்கக்கூடிய இடமல்ல, அங்கே உண்மையாகவே தங்கத்தினாலான வீதிகளோ, மதில்கள் விலையுயர்ந்த வச்சிரக் கற்களாலோ இருக்காது. அது ஓர் ஆவிக்குரிய ராஜ்யம், அங்கே இந்த பூமியில் காணப்படும் வஸ்துக்களுக்கு இடமே இல்லை. இந்த பூமியிலுள்ள விலையேறப் பெற்ற வஸ்துக்களைப் பயன் படுத்தி பரலோக மகிமையை யோவான் மூலமாக தேவன் விவரித்திருக்கிறார். பரலோகத்தில் பூமியில் இருப்பதுபோல் சூரியன், சந்திரன் எதுவும் ஒளிகொடுக்கத் தேவையில்லை, அங்கே இரவும் இராது, ஏனென்றால், அங்கே ஆட்டுக்குட்டி யானவரே வெளிச்சமாயிருப்பார் (வெளி. 21:23).

பிரியமானவர்களே, பரலோகத்திற்கு நாம் இந்த மாம்சத்தில் போக முடியாது. ஏனென்றால், மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது (1 கொரி. 15:50) நியாயத்தீர்ப்பு நாளிலே கிறிஸ்துவுக்குள் மரிக்கும் நம் எல்லோரையும் கிறிஸ்து நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். பின்பு நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (பிலி. 3:21; 1 தெச. 4:17). அது எவ்வளவு உன்னதமான அனுபவமாயிருக்கும், இதை உணர்ந்து கொண்டவர்கள் பரலோகத்தைக் குறித்து சதா கனவு காண்பார்கள்.

## III. பரலோகத்திற்கு யார் போக முடியும்?

பரலோக மகிமையானது அங்கே போக விரும்புபவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படுவதில்லை. வேதத்தில் இடம் பெற்றிருக்கும் தேவனுடைய பிரமாணங்கள் எல்லாவற்றையும் நாம் கடைபிடித்து நீதியான வாழ்க்கை வாழும் போதே நாம் பரலோகப் பாக்கியத்தை பெற்றுக் கொள்ள முடியும். பரலோகம் நமக்கு சுதந்தரமாக கொடுக்கப்படும் (1பேதுரு 1:4). சுதந்திரம் நாம் சம்பாதிக்கக்கூடிய ஒன்றல்ல, பிறரிடமிருந்து பெற்றுக் கெள்ளும் ஒன்று. அது தேவனுடைய ஈவாகும். நம் பெற்றோர் நமக்கு வீடு, ஆஸ்தி போன்ற சுதந்தரத்தை வைத்துப் போகிறார்கள், பிள்ளைகளாகிய நாம் அதை பெற்றுக்கொள்கிறோம்.

அதுபோலவே, நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற படியால் (8:16,17) தேவன் பரலோகத்தை நமக்கு சுதந்தரமாகத் தருகிறார். நாம் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்கும்போது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் (யோ. 3:5). அதாவது, தேவனால் பிறந்தவர்களாயிருக்கிறோம் (யோ. 1:13). அதே நேரத்தில் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்கிறவர்கள், துன்மார்க்கமாக ஜீவிப்பவர்கள் அந்த பரலோகத்திற்குப் போக வே முடியாது (1கொரி. 6:9,10) (கலா. 5:19,21). அவர்கள் எரி நரகத்தில் தங்கள் நித்தியத்தை கழிப்பார்கள், அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படாதவர்கள். எனவே, நரகத் திற்கு அவர்கள் பாத்திரர்கள். ஆனால், கிறிஸ்துவின் இரத்தத்தி னால் கழுவப்பட்டு நீதியான வாழ்க்கையை இந்த பூமியில் நாம் வாழும் போது பரலோகத்தில் என்றென்றும் தேவனோடு வாழும் சிலாக்கியத்தை, பாக்கியத்தைப் பெறுவோம், அங்கே நாம் பிரவேசிக்கப் பிரயாசப்படுவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென். ✝


## நாளும், நடப்பும்

1. பருவ மழையினால் ஏற்பட்ட பாதிப்பு இவ்வருடம் கடுமையாகவே இருக்கிறது.
2. யானை–மனித மோதலைத் தடுக்க அகழி – கோவையில் பணி தீவிரம்.
3. உலகிலேயே சர்க்கரை நோயாளிகள் இந்தியாவில் தான் அதிகம் என உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு.
4. 2020க்குள் மறுபயன் ஏவுகணையை இந்தியா தயாரிக்கும் – அப்துல்கலாம் தகவல்.
5. 2015க்குள் ஆர்க்டிக் கடல் பனிக்கட்டி முழுவதும் உருகி விடும் – பிரிட்டிஷ் விஞ்ஞானி.
6. மேற்கு இந்திய தீவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் தமிழக வீரர் அஸ்வின் ஆட்ட நாயகன்.

# கையால் பெயர்க்கப்படாத கல்

**BRO. ABEL R. NAYAGAM**

சிறு பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். திருமறை ஆசானில் மாதந்தோறும் வரும் ஒவ்வொரு பாடமும் உங்களுக்கு பயனுள்ளதாகவே இருக்கும் என நம்புகிறேன். சிறு வயதில் இருந்தே வேதாகம காரியங்களை கற்றுக் கொள்வது நம்முடைய இளமை பருவத்திலும், வாலிப பருவத்திலும் நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவியாயிருக்கும். சரி, இந்த மாதத்திற்கான பாடத்தை படிப்போமா?




வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ராஜ்யங்களிலே பாபிலோன் ராஜ்யம் என்பது ஒரு பெரிய ராஜ்யமாக இருந்தது. பாபிலோன் ராஜ்யத்தை ஆண்ட ராஜாவின் பெயர் நேபுகாத் நேச்சார். இந்த ராஜாவிற்கு ஒரு நாள் ஒரு (கனவு) சொப்பணம் வந்தது. நீங்களும் நானும் தூங்கும் பொழுது வரும் கனவு போன்றதாக இருந்தாலும் அது கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது. அந்த ராஜா, தனக்கு வந்த கனவின் அர்த்தம் புரியாமல் இருந்தான். அப்பொழுது தேவனுடைய மனிதனான தானியேல் தீர்க்கன் ராஜாவிற்கு அவருடைய சொப்பணத்தை விளக்கினான்.

தானியேல் 2:31-36ல் அதை வாசியுங்கள். நேபுகாத் நேச்சார், தலை தங்கத்தினாலும், மார்பும் கைகளும் வெள்ளியினாலும், வயிறும், தொடையும் வெண்கலத்தினாலும், கால்கள்

இரும்பினாலும் செய்யப்பட்ட ஒரு சிலையை கண்டான். அந்த சிலை ஒரு கல்லால் உடைக்கப் பட்டது. அந்த கல் சிலையை உடைத்து விட்டு, அது பூமி யெங்கும் பரவியது. இது தான் அந்த கனவு. ஏன் இந்த கனவு எனக்கு வந்தது? இதன் அர்த்தம் என்ன? ஒன்றும் புரியவில்லை என்று இருந்தான் ராஜா.

இந்த சொப்பணத்தின் விளக்கம் தான் என்ன என்று பார்ப்போமா? சிலையின் தலை, மார்பு, வயிறு, கால் என்ற இந்த 4 உறுப்புகளும் 4 சாம்ராஜ்யத்தை குறிக்கிறது. தலை பாபிலோன் ராஜ்யத்தை யும் மார்பு மேதிய-பெர்சியா ராஜ்யத்தையும், வயிறு கிரேக்க ராஜ்யத்தையும் கால்கள் ரோம ராஜ்யத்தையும் குறிக்கின்றன.

இந்த சொப்பணத்திற்கும் நாம் அங்கமாயிருக்கும் கிறிஸ் துவின் சபைக்கும் தொடர்பு இருக்கிறது என்பது ஆச்சரியம் அளிக்கிறது அப்படித் தானே.

என்ன தொடர்பு? எப்படி தொடர்பு? என்று கேட்கிறீர் களா? இந்த சொப்பணம் கிறிஸ்துவின் சபையை பற்றின ஒரு தீர்க்கதரிசனம்.

தேவனுடைய ராஜ்ய மாகிய சபையானது கையால் பெயர்க்கப்படாத கல்லாக சொல்லப்பட்டிருக்கிறது. அது பூமியின் மனிதர்களால் உண் டாக்கப்பட்ட ராஜ்யங்களை தகர்த்து உடைத்து, பூமி எங் கும் பரவியது.

இதிலிருந்து நாம் மூன்று முக்கியமான பாடங்களை கற்று கொள்ளுவோமா?

முதலாவது, மனிதர்களால் உண்டாக்கப்பட்ட ராஜ்யங்கள் எல்லாம் அழிவுள்ளது.

இரண்டாவது,தேவனுடைய ராஜ்யமாகிய சபை என்றும் அழிவில்லாதது.

மூன்றாவது, தேவனுடைய தீர்க்கதரிசன வசனங்கள் ஒவ் வொன்றும் பலநூறு ஆண்டு களுக்கு பின்பும் துல்லியமாக நிறைவேறியிருக்கிறது.

ஆக பிள்ளைகளே, ராஜ்ய மாகிய சபை பலநூறு ஆண்டு களுக்கு முன்பாக உரைக்கப் பட்டது. அந்த சொப்பணத்தில் சொன்ன ஒவ்வொரு வார்த்தை களும் நிறைவேறியது. ரோம ராஜ்யத்தின் இறுதியில் ஸ்தா பிக்கப்பட்டது சபை. அன்றில் இருந்து இன்று வரைக்கும் அழியாமல் இன்றும் பரவிக் கொண்டிருக்கிறது.

சரி, தேவனின் மகத்துவ மான ஞானம் மிகவும் ஆச்சரிய மாக உள்ளது தானே ! அந்த அழிவில்லாத ராஜ்யத்தில் நாம் அங்கமாக இருப்பது என்ன ஒரு ஆசீர்வாதம் ! அதற்கு உகந்த சிறு பிள்ளைகளாக உண்மையாய் பிரியமாய் தேவ னுக்கு சந்தோஷம் தரும் சிறுவர் களாக இருப்பீர்களாக ? இருங் கள். என்ன சரியா? அடுத்த மாதம் சந்திப்போம்.

தேவன் நம்மை ஆசீர்வ திப்பாராக. ✝

# "துருவின் சாட்சி" நூலில் இருந்து

# பாடம் - 11 துருவின் சாட்சி

# கொடுத்தலும், வாங்குதலும்

**நோக்கம்**

உண்மையான மகிழ்ச்சி கொடுப்பதால் வருகிறதென்றும், கொடுத்தல்; கொடுப்பவரையும், பெற்றுக் கொள்பவரையும் ஆசீர்வதிக்கிறதென்றும், கொடுக்கிறவர் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறார் என்றும் காட்டுவது.

**உங்கள் சிந்தனைக்கு**

நீங்கள் வாழ்கிறபோது கொடுத்துக் கொண்டிருங்கள், பிறகு அது, எங்கே போகிறதென்பதைத் தெரிந்து கொள்ளுவீர்கள்.

**முன்னுரை**

மனிதன் மறக்கும் இயல்பு கொண்டவன். நம் எல்லோருக்குமே நம்முடைய கடமைகள் குறித்து நினைவூட்டப்படுவது அவசியம். இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைவூட்ட நான் அசதியாயிரேன் (பேதுரு 1:12). பவுல், அப். 20:35ல் "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்" என்றார். ஒரு சராசரிக் கிறிஸ்தவன் இதை வாசிக்கும்போது, இது எப்படி சரி என்று எண்ணுவார். "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறது பாக்கியம் என்பதை அறிவேன். ஆனால், வாங்குவது எனக்கு நல்லதாக இருக்கிறதென்று யாரோ ஒருவர் சொன்னதை மேற்கோள் காட்டுவான். இப்படி இதை வேடிக்கையாகப் பேசுவது சரியல்ல. ஏனெனில், கொடுப்பது பாக்கியம் என்று சொன்னவர் தேவனுடைய குமாரன். ஒரு சாரார் இதை உண்மை என்று நம்புகின்றனர், மற்றவர்கள் பொய் என்று தள்ளுகின்றனர். இயேசு உண்மையைத் தான் சொன்னார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? இதை நாம் செயல்படுத்த வேண்டுமென்ற அளவுக்கு நம்புகிறோமா? மறுபடியும் கேட்கிறேன். இது உண்மையா அல்லது பொய்யா? இது பொய்யாக இருந்தால், இது புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருந்தாலும், நடைமுறையில் இதை உண்மையாக்காது. மாறாக, இது உண்மையாக இருந்தால் உலகில் உள்ள பெரும்பாலானவர்கள் இதை ஏற்றுக்கொள்வதில்லை என்பது உண்மையாக இருந்தாலும், இது பொய்யாகாது.

## I பெற்றுக்கொள்ளுதலின் பாக்கியம்

வாங்குவதைப் பார்க்கிலும், கொடுத்தலே பாக்கியம் என்று இயேசு சொன்ன போது, பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியே இல்லை என்று அவர்

பொருள் கொள்ளவில்லை. பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி உண்டு என்று நம் எல்லோருக்கும் தெரியும். நம்முடைய வாழ்க்கையில் நாம் வெகு மதிகளைப் பெற்றிருக்கிறோம்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், கொடுத்தலில் உள்ள மகிழ்ச்சியை மறக்கின்ற அளவில், பெரும் பாலானவர்களாகிய நாம் பெற்றுக் கொள் கிறவர்களாகவே உள்ளோம். பெற்றோர்களிடமிருந்து வெகு மதிகளைப் பெற்றுக் கொள்வது ஒவ்வொருவருக்கும் பசுமையான நினைவாக இருக்கும். நாம் சிறுவர்களாக இருந்த போது, விசேஷித்த நாட்களில் நாம் கொடுக்கிறவர்களாக இல்லாமல் பெற்றுக் கொள்கிறவர்களாக இருந்திருப்போம். இப்படி பெற்றுக் கொள்ளும் முறையை யே நாம் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். எப்பொழுதும் பெற்றுக் கொள்கிறவர்களாகவே இருக்க வேண்டுமென்ற எண்ணம், நம்மை மோசமான நிலைக்கு வழி நடத்துகிறது. இப்படி வெறுமனே எதையாவது பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற விருப்பம் நம்முடைய நாட்களில் சூதாட்டம் மனப்பான்மை கொண்ட சாபமாக மாறிவிடுகிறது.

ஆனால், பெற்றுக்கொள்வதில் உண்டாகும் மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரிய மகிழ்ச்சி ஒன்று உண்டு நாம் எல்லோரும் மனதில் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய வாழ்க்கையில் பெற்றுக் கொண்ட எல்லாம் நம்மிடமிருந்து எடுக்கப்பட்டிருக்குமானால், நம்மால் வாழ்ந்திருக்க முடியாது. யெகோவாவிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் எல்லா ஆசீர்வாதங்களையும் எண்ணிப் பாருங்கள்! பழைய ஏற்பாட்டில், அநேக இடங்களில் தேவன் அடிக்கடி, நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லியுள்ளார். நாம் எல்லோரும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஜெபங்கள் பெரும்பாலும் நன்றி சொல்லுதலாக இல்லாமல், விண்ணப்பங்களாகவே இருப்பது பெற்றுக் கொள்வதில் தான் நம்முடைய நம்பிக்கை உள்ளதென்பதையே காட்டுகிறது. "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று தேவன் சொல்லுவதைக் கேட்பது நல்லது. ஆனால், அதைக் காட்டிலும் மேலான ஒன்று இருக்கிறது. அது, "வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்" என்று இயேசுவானவர் சொன்ன வார்த்தைகள் தான்.

## II கொடுத்தலிலுள்ள மகிழ்ச்சி

நான் சிறுவனாக இருந்த போது, ஒரு கிராமத்தில் மவுண்ட் பிளசன்ட் கிறிஸ்துவின் சபைக்கு ஞாயிறு பள்ளிக்குச் சென்றேன். அந்த சபையில் இருந்த மூப்பர்களில் ஒருவராக இருந்த வெர்னர் ஐயா அவர்கள் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறார். சோர்வான, கவலை தரும் வேளையின் போது, மாதத்திற்கு ஒரு முறை அந்த சபைக்கு பிரசங்கம் செய்ய வந்த பிரசங்கியாரிடம், ஐந்து டாலர் கொடுத்தார். அதற்கு அந்த பிரசங்கி, "வேண்டாம், பஞ்ச காலமாக இருக்கிறது, ஆகையால், நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்றார்". அதற்கு வெர்னர் ஐயா, "உங்களுக்கு இதைக்கொண்டு வந்திருக்கிறேன், இதை வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வெறுமனே ஐந்து டாலரைப் பெற்றுக் கொள்ளுகிறீர்கள். ஆனால், எனக்கோ ஆவிக்குரிய

ஆசீர்வாதங்கள் அநேகம் கிடைக்கும் என்றார்". அந்த வயதான ஐயா, உண்மையாகவே அப். 20:35 அறிந்ததோடு அதைப் புரிந்துமிருந்தார்.

மகிழ்ச்சியாகவும், உற்சாகவும், கொடுப்பது தான் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றதாயிருக்கிறது. "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்". (2 கொரி. 9:7) இப்படி சொல்லியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. எப்படியெனில், இந்த வகையானதைத் தான் நாமும் விரும்புவோம். வேண்டா வெறுப்போடு வெகுமதியைப் பெற்றுக் கொள்ள யார்தான் விரும்புவார்?.

கொஞ்சகாலம் வெளியே இருந்து பிறகு வீடு திரும்பும் ஒரு கணவர், ஒரு வெகுமதியை மனைவிக்குக் கொண்டு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். வீட்டுக்குள் நுழைந்தவுடன் கொண்டு வந்ததைத் தூக்கிக் கீழே எறிந்ததுடன், "வெகுமதியை எடுத்துக் கொள், இதை உனக்கு வாங்கி வரவேண்டுமென்று விரும்பவில்லை, ஆனால், அப்படி வாங்கி வரவில்லையென்றால், நீ கோபம் கொள்வாய் என்று எனக்கு தெரியும்" என்று சொன்னால் மனைவி அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வாளா? சபையில், கொடுக்கும் சிலபேர், உண்மையில் அப்படிப்பட்டவர்கள். கொடுக்கும் போதெல்லாம் தேவனையும், அவருடைய வேலையையும் அவமானப்படுத்துகிறார்கள்.

II கொரிந்தியர் 8-ம் அதிகாரத்தில் நாம் சில பிச்சைக்காரர்கள் பற்றி வாசிக்கிறோம். அப்பொழுது, அவர்களுக்கிருந்த கொடிய சூழ்நிலையினிமித்தம் அவர்களை இப்படி எழுதுகிறோம். பவுல் இந்த பிச்சைக்காரர்கள் பற்றி சிறப்பாகப் பேசுகிறார். பாடுகள் எங்களுக்கு வரக்கூடாது என்று அவர்கள் கேட்கவில்லை. தங்களுக்குப் பெரிய பதவி வேண்டுமென்றோ, தங்களுக்கு முதன்மையான இடம் வேண்டுமென்றோ கெஞ்சவில்லை. இப்பொழுது, இங்கே கவனியுங்கள். பரிசுத்தவான்களை தாங்கும்படியான ஒரு சந்தர்ப்பத்தைத் தங்களுக்குத் தாரும் என்று பவுலிடம் கெஞ்சினார்கள். தன் இருதயத்தில் மகிழ்ச்சி பொங்காமல் பவுலடியார் அந்த மக்கெதோனியர்களை ஒரு போதும் நினைத்திருக்க முடியாது. இந்த ஜனங்கள் தங்களுக்கு இருந்தவைகளைப் பற்றி ஓர் அற்புதமான மனநிலையைக் கொண்டிருந்தனர். ஆர்வமில்லாமலும், முகவாடலாகவும் கொடுப்பவர்களுக்கு, கர்த்தருக்கு கொடுப்பது தங்கள் மேல் விழுந்த கடமை என்று தெரிவதில்லை. கொடுப்பது மகிழ்ச்சியானது, மக்கெதோனியர் தங்கள் இருதயங்களில் மகிழ்ச்சியோடு கொடுத்தார்கள். "தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள்" (II கொரி. 8:4) என்று பவுல் கூறுகிறார்.

(தொடரும்)

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 13 கிறிஸ்தவ ஊழியம்

Bro. K. பாஸ்கர்

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இக் கட்டுரையை படித்து வருகிறபடியால் மகிழ்ச்சி அடைகிறேன். அதன் மூலம் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொண்டு வருகிறதற்காக தேவனுக்கு நன்றி சொல்கிறேன். நீங்கள் இங்கே சொல்லப்படுகிற வசனத்தை சிந்தித்து கிறிஸ்துவின் சபையில் செயல்பட கர்த்தர் உங்களை வழி நடத்துவாராக!

இம்மாதத்தில் கிறிஸ்தவ ஊழியம் என்ற ஒரு முக்கியமான பாடத்தைப் படிக்க இருக்கின்றோம். இன்று கிறிஸ்தவ ஊழியம் என்ற பெயரில் மனிதரால் பல ஸ்தாபனங்கள் உண்டாயிருக்கின்றது. மனிதனுடைய புகழுக்காகவும், பெருமைக்காகவும் அவைகள் செயல்படுகின்றன. நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். (1 யோவ 4:1)

### I. கிறிஸ்தவ ஊழியம் என்றால் என்ன?

கிறிஸ்தவம் என்றால் கிறிஸ்துவையும், அவரது உபதேசத்தையும் மையமாகக் கொண்டது. கிறிஸ்தவ ஊழியம் என்பது கிறிஸ்துவின் உபதேசத்தின்படி சேவை செய்வதாகும். புதிய ஏற்பாட்டில் ஊழியம் என்ற வார்த்தை பல வகையில் சொல்லப்பட்டுள்ளது. அது ஏறக்குறைய 38 முறை வருகிறது. அவைகளில் சிலவற்றைக் கவனியுங்கள். ஊழியம் செய் (மாற் 10:45) பணிவிடை செய் (மத் 20:26) உதவி செய் (மத் 24:44) தேவனை சேவித்தல் (ரோம 1:25) என்பன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யும்படியாகவும் அநேகரை மீட்க தம்முடைய ஜீவனைக் கொடுக்கும்படியாகவும் வந்தார். (மாற் 10:45) பிறருக்குப் பணிவிடை செய்தார், பிறருக்கு உதவி செய்தார். அதோடு தேவனை சேவித்தார்.

பிறருக்கு உதவி செய்வது குறித்து ஒரு நல்ல உதாரணம் நல்ல சமாரியன் உவமையாகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று இந்த நல்ல உதாரணத்தைக் கூறுகின்றார். (லூக் 10:30-37) அதாவது, ஒரு மனுஷன் எருசலேமிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர்

கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து அவனைக் கண்டு பக்கமாய் விலகிப் போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில் அவனைக் கண்டு மனதுருகி கிட்ட வந்து அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்ச ரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி அவனைத் தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி சத்திரத்துக்கு கொண்டு போய் அவனைப் பராமரித்தான்.

இந்த உவமையில் அடிபட்டவனுடைய உறவினர் ஆசாரியனும், லேவியனுமாயிருந்தான். ஆனால், அவர் யாரும் அடிபட்டவனுக்கு உதவி செய்ய முன் வரவில்லை. ஆனால், முன் பின் தெரியாத அந்த சமாரியன் அவனுக்கு உதவி செய்தான். அந்த சமாரியன் வந்த வாகனம் அந்த நாளில் கழுதைக் குட்டி களை வாகனமாக பயன்படுத்துவார்கள். அப்படியென்றால் அடி பட்டவனை தன் வாகனத்தில் (கழுதையின் மீது) ஏற்றிக் கொண்டு சமாரியன் நடந்து வந்திருக்கின்றான். சிகிச்சை அளிப்ப தற்கான பணத்தைக் கொடுத்து பராமரித்தான். இந்த உவமையில் நல்ல சமாரியன் தன் சுகத்தை விட பிறருடைய சுகத்தை விரும்பி னான். தன் சுகத்தைத் தியாகம் செய்தான். பிறருடைய நலன்களை முக்கியமாக எண்ணினான். இதுதான் ஊழியத்தின் இலக்கணமாக உள்ளது. கிறிஸ்தவ ஊழியத்தில் பிறருடைய சுகம், தியாகம், பொருட்செலவு, பண செலவு இருக்க வேண்டும். உதவி பெற்றுக் கொள்ளும் நபர் நல்லவராக இருக்கலாம் அல்லது நமக்குத் தொந் தரவு, உபத்திரவம் தீமை செய்கிறவராக இருக்கலாம். அதைக் குறித்துக் கவலைப்படாமல் அவர் களுக்கு உதவி செய்வதே கிறிஸ்தவ ஊழியமாக உள்ளது. (மத். 5:44) ஒரு மருத்துவ சேவை செய்யும் மருத்துவர் நல்லவருக்கு மட்டும் சிகிச்சை அளிப்பதில்லை. தீயவருக்கும் அதே சிகிச்சையை அளிப்பார். அவருடைய சிகிச்சையில் யாதொரு வித்தியாசமும் இருக்காது. அப்படி வித்தியாசமான சிகிச்சை இருக்குமேயானால் அந்த மருத்துவர் அந்த மருத்துவ சேவைக்குச் செய்யும் துரோகமாக இருக்கும். அது போல கிறிஸ்தவ ஊழியம் யாதொரு வித்தியாச மும் இல்லாமல் உதவி, சேவை, பணிவிடை செய்வதாகும்.

## II. கிறிஸ்தவ ஊழியம் எப்படிப்பட்டதாக இருக்கக் கூடாது?

இன்றைய நாட்களில் கிறிஸ்தவ ஊழியம் என்ற போர்வை யில் பல மூட நம்பிக்கைகளைப் போதித்து வருகின்றனர். மூட நம்பிக்கைகளைக் கொண்டதல்ல கிறிஸ்தவ ஊழியம். தெளிந்த

புத்தியும், விழிப்புணர்வையும் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. (1 பேதுரு 5:8) ஆனால், பலர் பேய், பிசாசுகளைத் துரத்துவதாகக் கூறிக் கொண்டு செயல்படுகின்றனர். முதல் நூற்றாண்டு காலத்தில் பிசாசு பிடித்தவர்கள், அசுத்தாவி பிடித்தவர்கள் சர்வ சாதாரணமாக இருந்தார்கள். பிசாசின் கிரியை களை அழிக்கும்படிக்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வந்தார் (1 யோவான் 3:8) மூலமாக பிசாசின் கிரியைகளை அழித்து வெற்றி சிறந்தார். (எபி 2:14) எனவே, இன்று அப்படி இருக்கின்றார்கள் என்றால் அவர்களுக்குரிய அடையாளங்களான அவனது குடியிருப்பு கல்லறையிலே இருக்க வேண்டும், அவனை சங்கிலிகளினால் கட்டப்பட ஒருவனாலும் முடியாததாக இருக்க வேண்டும். சங்கிலிகளையும்ல விலங்குகளை உடைக்கிறவனா யிருக்க வேண்டும். அவனை அடக்க முடியாதவனாயிருக்க வேண்டும். அவன் எப்பொழுதும் இரவும், பகலும் உறங்காமல் கூக்குரலிட்டு கல்லுகளினால் தன்னைக் காயப்படுத்திக் கொள்ள வேண்டும். (மாற் 5:1-5) இப்படி யாரும் இருப்பதாகத் தெரிய வில்லை! அப்படி அசுத்தாவி பிடித்தவர்கள் இருந்தால் அவர் களை துரத்துவதற்கு அற்புதம், அடையாளம் செய்யும் வல்லமை தேவை! இன்று அந்த வரங்கள் இல்லை. (1 கொரி. 13:8-10) ஆகவே பிசாசு பிடித்தவர்கள், அசுத்தாவி பிடித்தவர் கள் இன்று இல்லை.

மேலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்தை விட்டு விட்டுப் பேய் பிசாசுகளை துரத்துபவர்களைக் குறித்து எச்சரித்து சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா. உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங் களைச் செய்தோம் அல்லவா என்பார்கள்.

அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத் 7:21-23) பிதாவின் சித்தம் தீர்க்கதரிசனம் உரைப்பதும் பிசாசுகளைத் துரத்துவதும் பற்பல பாஷைகளைப் பேசுவதும் அல்ல! இது அக்கிரமச் செயல் கள் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். பிதாவின் சித்தம் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவு அடையவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கின்றார் (1 தீமோ. 2:4) இந்த அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளாமல் பிடித்தால், பிசாசு துரத்துதல், பில்லிசூனியக் கட்டுகள் என்று மூட

நம்பிக்கையான இந்த செயல்களைச் செய்வது கிறிஸ்தவ ஊழிய மல்ல! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வந்ததின் நோக்கம் பாவிகளை இரட்சிக்கவே. (1 தீமோ 1:15)

இன்றைய நாட்களில் இரட்சிக்கப்பட்டதாகக் கூறிக் கொள்ளும் அல்லேலூயா கூட்டத்தாரை விசாரித்தால் பில்லி சூனியக்கட்டுகளிருந்ததாகவும், பிசாசு பிடித்திருந்ததாகவும் அதிலிருந்து இரட்சிக்கப்பட்டேன் என்று தான் கூறுவார்கள். யாரும் தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பி இரட்சிக்கப் பட்டதாகக் கூறுவதில்லை. அவர்களுக்காக கிறிஸ்தவ ஊழியம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்ட ஊழியம் கிறிஸ்தவ ஊழியம் அல்ல! முறைப்படி சத்தியத்தை கேட்டு, விசுவாசித்து மனந் திரும்பி, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவா சித்து, ஞானஸ்நானம் பெறும்படி வழிநடத்துவதுதான் கிறிஸ்தவ ஊழியம்.

இயேசு கிறிஸ்து டிசம்பர் 25 ஆம் தேதி பிறந்தார் என்றும் அந்நாளில் கிறஸ்துமஸ் கொண்டாடுவதும், அன்னை மரியாள் அற்புதங்களை செய்கின்றார் என்பதும் கட்டுக் கதைகள். வம்ச வரலாறு கிறிஸ்தவ ஊழியம் கட்டுக்கதைகளையும், இப்படிப் பட்ட வம்ச வரலாறுகளையும் கொண்டதல்ல! (I தீமோ. 1:3) ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்க வேண் டும். (I பேதுரு 4:11) வேத வாக்கியங்களில்லாத பல மூட நம்பிக்கைகளைக் கொண்டதாக கிறிஸ்தவ ஊழியம் இருக்கக் கூடாது! தேவனிடத்தில் கொண்டுள்ள விசுவாசம் வேத வசனத் தால் வரவேண்டும். அப்படி வேத வசனத்தால் வராத உபதேசம், மூடநம்பிக்கைகள் யாவும் பாவச் செயல்களே! (ரோமர் 14:23).

நாம் இப்படிப்பட்ட பாவச் செயல்களான மூட நம்பிக்கை யிலிருந்து விடுபட வேதத்தை நேசிக்க வேண்டும் (சங். 1) வேதத்தை அறிய வேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து வேதத் தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று எச்சரிக்கின்றார் (யோவான் 7:49). வேதத்தைக் கேளாமல் ஆண்டவரே, ஆண்டவரே என்று ஜெபம் செய்கிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது (நீதி. 28:9).

அன்பானவர்களே, தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஒரே ஒரு பரிசுத்த வேதாகமத்தைப் பகுத்துப் படித்து (2 தீமோ. 2:15) கிறிஸ்துவின் உபதேசப்படி செயல்படாத ஊழியங்கள் எல்லாம் கிறிஸ்தவ ஊழியம் அல்ல என்பதை உணர்ந்து, அப்படிப்பட்ட ஊழியங்களுக்கு உதவி செய்வது என்பது பாவமான காரியம் என்பதை அறிந்து உண்மையான, கிறிஸ்துவின் உபதேசப்படிச் செயல்படும் கிறிஸ்துவின் சபையின் ஊழியத்தை ஏற்றுக்கொண்டு தாங்குவோம்.

## III. கிறிஸ்தவ ஊழியத்தின் பலன்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் தம்முடைய ஜனங்களைப் பார்த்து நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் என்றும் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்றும் கூறினார். இதன் பொருள் ஒரு கிறிஸ்தவன், அல்லது கிறிஸ்துவின் சபையானது பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதுதான். இதன் மூலம் பரலோகத்திலிருக்கிற பிதா மகிமைப்படுகின்றார் (மத். 5:14-16) இந்த உலகத்தில் செய்யப்படும் கிறிஸ்தவ ஊழியத்தின் மூலமாக இந்த உலக மக்கள் பல நன்மைகளைப் பெற வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.

ஆனால், சிலர் சபையானது பரிசுத்தவான்களுக்கு மட்டும் உதவி செய்ய வேண்டும் என்ற உபதேசத்தைப் போதிக்கின்றனர். இது வேதத்தின்படி சரியானது இல்லை! வேதத்திற்கு முரண்பாடாக உள்ளது. இது தேவனுடைய திட்டத்திற்கு எதிரானதாகக் காணப்படுகின்றது. எப்படியென்றால், கலாத்திய நாட்டுச் சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்போது (கலாத். 1:2). ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பதாருக்கும் நன்மை செய்யக்கடவோம் என்று கூறுகிறது (கலாத். 6:10) இந்த வசனப் பகுதியான ஒரு தலைப்பட்ட கிறிஸ்தவனுடைய கடமையை மட்டும் இது குறிப்ப தில்லை. சபையின் மூலமாகச் செய்யப்படும் உதவியைக் குறித்து குறிக்கிறது. கலாத்திய நாட்டுச் சபைகளுக்கு பண்ணின திட்டத்தின்படி நாமும் செய்ய வேண்டும் என்று பவுல் வலியுறுத்துகின்றார் (1கொரி. 16:1) ஆகவே, சபையானது பரிசுத்தவான்களுக்கும், மற்ற அனைவருக்கும் (கிறிஸ்தவரல்லாதோர்) உதவி செய்ய வேண்டியது அவசியமாயிருக்கின்றது. (II கொரி. 9:12) கிறிஸ்தவரல்லாதோருக்கு உதவி செய்ததின் மூலமாக அவர்கள் சுவிசே ஷத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனை ஸ்தோத்தரித்தார்கள். (II கொரி. 9:13) பரிசுத்தவான்களுக்கு மட்டும் சபையானது உதவி செய்ய வேண்டும் என்ற உபதேசமானது இரட்சிப்பு விசுவாசத்தினால் மட்டும் வருகிறது என்ற போதனையைப் போன்றது.

கிறிஸ்தவ ஊழியத்தினால் இப்பூமியிலுள்ள அனைவரும் பாவ மன்னிப்பாகிய இரட்சிப்புப் பெற வேண்டும் அதன் மூலம் தரமான வாழ்வை இந்த மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் ஜீவனைக் கொடுத்தார். (யோவான் 10:10,11) ஜீவன் என்பதற்கு இரண்டு விதமான அர்த்தம் உண்டு. ஒன்று உயிர் இன்னொன்று வாழ்வு. பரிபூரணமான வாழ்வு தரமான வாழ்வு (யோவான் 10:10) இயேசு கிறிஸ்து தம்மை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு பாவ மன்னிப்பும், தரமான வாழ்க்கையும் தருகின்றார். மரண பரியந்தம் அவருக்கு உண்மையாயிருந்தால் நித்திய ஜீவனையும் கொடுப்பார் (மத். 19:29, வெளி. 2:10). ✝

**(தொடரும்)**

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.


| | | | |
|---|---|---|---|
| பொதிகை | TV | சனி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுணன்,** வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| தமிழன் | TV | சனி | காலை 6:15 மணி |


- ஆசிரியர்



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை TV | ஞாயிறு | காலை | 5:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட

**சத்தியத்தின் குரல்**

என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

**கீழ் காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**




## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.